

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த திமுக தலைமை நிலையச் செயலாளரும், தென்னிந்திய நடிகர்சங்க துணைத்தலைவருமான பூச்சி எஸ். முருகனை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். அவரது உடல்நிலை குறித்து மருத்துவர்களிடம் விரிவாகக் கேட்டறிந்த அவர், விரைவில் முழுமையாக குணமடைந்து பொதுப்பணிக்குத் திரும்ப வேண்டும் என தனது வாழ்த்துகளையும் தெரிவித்தார். உடன் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு மற்றும் கழக நிர்வாகிகள். இதனையடுத்து தென்னிந்திய நடிகர் சங்க தலைவர் நாசர், பொது செயலாளர் விஷால், பொருளாளர் கார்த்தி, துணை தலைவர் கருணாஸ் மற்றும் நிர்வாகிகள் ஆகியோரும் நேரில் சந்தித்து நலன் விசாரித்தனர்.

## சிதம்பரத்தில் கலைஞர் நினைவு நாள்! 1000 பேருக்கு உணவு!

சிதம்பரம் ஆக.8–

சிதம்பரத்தில் திமுகவினர் சார்பில் கலைஞர் நினைவு நாளை முன்னிட்டு முன்னாள் அமைச்சரும் மாவட்ட செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவுறுத்த லின் பேரில்,சிதம்பரம் நகர செயலாளர் கே.ஆர் செந்தில்குமார் மாவட்ட பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் ஆகியோர்களின் வழிகாட்டுதலின் படி, சிதம்பரம் வார்டு எண் 16 ராஜேஸ்வரி திருமண மண்டபம் அருகில் திமுக பொதுக்குழு உறுப்பினரும், நகர் மன்ற கொறடாவுமான ஜேம்ஸ் விஜயராகவன் தலைமையில் ஆயிரம் பேருக்கு உணவு வழங்கப்பட்டது .

### எதிர்க்கட்சித் தலைவர் பேசாததைப் பேசியதாக செய்தி வெளியிட்ட

# ‘இந்தியா டுடே’ மற்றும் ‘என்.டி.டி.வி.’ தொலைக்காட்சிகள் மீது அவதூறு வழக்கு!

# ரூ.100 கோடி நஷ்டஈடு கேட்டு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தொடர்ந்தார்!

## நஷ்டஈடு தொகை விவசாயிகளுக்கு வழங்கப்படும்!

சென்னை, ஆக.8–

**எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசாததைப் பேசியதாக திரித்து செய்தி வெளியிட்ட ‘இந்தியா டுடே’ தொலைக்காட்சி மற்றும் அதன் செய்தித் தொகுப்பாளர் அக்ஷிதா நந்தகோபால் & ‘NDTV 24x7’ தொலைக்காட்சி நிறுவனம் மற்றும் அதன் செய்தித் தொகுப்பாளர் சிவ அரூர் ஆகியோர் மீது 100 கோடி ரூபாய் நஷ்ட ஈடு கேட்டு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் சார்பில் வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன் அவதூறு பரப்பியதற்காக பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும், 100 கோடி ரூபாய் நஷ்ட ஈடு தொகை விவசாயி களுக்கு வழங்கப்படும் என்றும் அந்த நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

இது பற்றிய விவரம் வருமாறு:–

தமிழ்நாட்டின் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தி.மு.க. இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதைத் திரித்து அவதூறாக செய்திகளைப் பரப்பியதற்காக ‘இந்தியா டுடே’ (India Today TV) தொலைக்காட்சி நிறுவனம் & அதன் மூத்த செய்தி தொகுப்பாளர் அக்ஷிதா நந்தகோபால் மற்றும் ‘NDTV 24x7’



தொலைக்காட்சி நிறுவனம் & அதன் செய்தித் தொகுப்பாளர் சிவ அரூர் ஆகியோரிடம் 100 கோடி ரூபாய் நஷ்ட ஈடு கேட்டு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சார்பில் 06 ஆகஸ்ட் 2026 அன்று வழக்கறிஞர் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் 3 மற்றும் 4 ஆகிய தேதிகளில் ‘இந்தியா டுடே’ தொலைக்காட்சியிலும், அதன் யூடியூப் பக்கத்திலும் ஒளிபரப்பப்பட்ட விவாத நிகழ்ச்சிகளில், தஞ்சாவூரில் நடைபெற்ற விவசாயிகளுக்கு ஆதரவான போராட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையைத் திரித்து, தவறான மற்றும் அவதூறான கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளது.

அவர் தனது உரையில் எந்தவொரு தனிநபரையோ, நடிகை திரிஷாவையோ சுட்டிக்காட்டிப் பேசவில்லை அப்படி இருக்கும் போது பெண்களை இழிவுபடுத்தும் வகையில் பேசியதாக செய்தித் தொகுப்பாளர் அக்ஷிதா நந்தகோபால் தவறான அர்த்தம் கற்பித்துள்ளார்.

அதேபோல என்.டி.டி.வி. செய்தித் தொகுப்பாளர் சிவ அரூர், விவசாயிகளுக்கு ஆதரவான போராட்டக் கூட்டத்தில் சிலர் எழுப்பிய கோஷங்களை உதயநிதி ஸ்டாலினின் அவர்களின் கருத்தாகச் ஜோடித்து, அதை இரட்டை அர்த்த ஆபாசப் பேச்சாக தவறாகச் சித்தரித்துள்ளார். சிவ அரூர் அவர்கள் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக தனது சமூக வலைதளப் பக்கங்களில் (X/Twitter) திமுக, திமுக தலைவர்கள் மற்றும் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் குடும்பத்தினருக்கு எதிராக அருவருப்பான சொற்களைப் பயன்படுத்தித் தொடர்ச்சியாகத் தனிப்பட்ட பகை உணர்வை வெளிப்படுத்தி வந்துள்ளது ஆதாரங்களுடன் நோட்டீஸில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எந்த இடத்திலும் நடிகை திரிஷாவின் பெயரையோ, முதலமைச்சரின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றியோ பேசாத நிலையில், NDTV விவாத நிகழ்ச்சியில் அவர்களது புகைப்படங்களை ஒளிபரப்பி, அவதூறான கருத்துக்களை உதயநிதி ஸ்டாலின் மீது சுமத்தியுள்ளது திட்டமிட்ட சதிச் செயல் என அந்த நோட்டீஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த சட்டப்பூர்வ நோட்டீஸ் கிடைத்த 48 மணி நேரத்திற்குள் இந்தியா டுடே தொலைக்காட்சி மற்றும் ‘NDTV 24x7’ தொலைக்காட்சி அவர்களின் அதிகாரப்பூர்வ சமூக வலைதளப் பக்கங்களில் நிபந்தனையற்ற பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். அவதூறு பரப்பும் வகையில் யூடியூப் மற்றும் சமூக வலைதளங்களில் வெளியிடப்பட்ட வீடியோக்களை உடனடியாக நீக்க வேண்டும். எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தியதற்காக ரூ.100 கோடி நஷ்ட ஈடு வழங்க வேண்டும். அந்த தொகையானது காவிரி குறுவை சாகுபடியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழுமையாக வழங்கப்படும் என அந்த வழக்கறிஞர் நோட்டீஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறிப்பிட்ட கெடுவுக்குள் மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறினால், இந்தியா டுடே நிறுவனம் மற்றும் செய்தித் தொகுப்பாளர் மீதும் , ‘NDTV 24x7’ நிறுவனம் மற்றும் அதன் செய்தித் தொகுப்பாளர் மீதும் கிரிமினல் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

### திருவாரூர் மாவட்டம் –

# திருக்குவளையில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலைக்கு மாலை - மரியாதை!

## என்.கௌதமன் தலைமையில் – உ.மதிவாணன் – கழகத்தினர் கலந்துகொண்டனர்!

*நாகை, ஆக. 8 - முத்தமிழ் அறிஞர்கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி நாகை மாவட்டம் திருக்கு வளையில் கலைஞர் சிலைக்கு தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரி யாதை செலுத்தினர்.*



சேப்பாக்கம் பகுதி தி.மு.க. சார்பில் பகுதி துணைச் செயலாளர்கள் எம்.சி.பி.இளையராஜா, எஸ்.கே.ராஜ் ஆகியோர் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு மதிய உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பகுதிக் கழகச் செயலாளர், 9 வது மண்டலக் குழுத் தலைவர் எஸ். மதன்மோகன் நிகழ்ச்சியை துவக்கி வைத்து பொதுமக்களுக்கு உணவு வழங்கினார். உடன் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாலசந்தர், வடிவேலு, நந்தகுமார், ஜகுர், ஜெயவேல், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கிரிதரன், நரேன் ஷா, சபரி, ராஜா ஷா, ரமேஷ் கேசவன், நரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

*நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருக்குவளை இல்லத்தில் அவரது சிலைக்கு நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்கள். இதே போல் கலைஞரின் தந்தை முத்துவேலர், தாயார் அஞ்சுகம், முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலிமாறன் ஆகியோர் சிலை களுக்கும் மாலை அணிவித்து மரி யாதை செலுத்தப்பட்டது.*

*இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன். தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இல.மேகநாதன், ப.கோவிந்தராசன், திருவாரூர் சோமாஸ்கந்தன், மாவட்ட கழக துணை செய லாளர் கற்பகம்நீலமேகம், பொதுக்குழு உறுப்பினர்கள் இல.பழனியப்பன், கோ.சிவக் குமார்,*

*ஒன்றிய செயலாளர்கள் ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், சோ. பா.மலர்வண்ணன், கே.பழனி யப்பன், மகா. குமார், சிக்கல் என்.ஆனந்த், உதயம் வே.முருகையன், பேரூர் செயலாளர்கள் மரியசார்லஸ், முகமதுசுல்தான் ஒன்றிய குழு முன்னாள் தலைவர் தமிழரசி, தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங் கிணைப்பாளர் அ.பரிபாலன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் புவனேஸ்வரி செந்தில், மாவட்ட*

*தொழிலாளர் அணி தலைவர் என்.மோகன் தாஸ், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் பி.தியாகராஜன், எஸ்.செல்வா, மா.செந்தில், குவளை கணேசன், ஈ. ஜோதிபாசு, வி.ஆர்.சுப்ரமணியன், ஒன்றிய நிர்வாகிகள் வை.சண்முகசுந்தரம், பார்த்திபன், சுரேஷ் , நிமல் வடக்குபொய்கைநல்லூர் திருநாவுகரசு, ஒன்றிய இளைஞரணி ஆர்.குமார், தியாகராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண் டனர்*

# மறக்க முடியுமா?



**மறைந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன**
**மறக்க முடியவில்லை உங்களை!**

**எனது திருமணம்**
**எனது மூன்று மகன்கள் திருமணங்கள்**
**நடத்தி வைத்து வாழ்த்தினீர்கள்**

**பல தலைமுறை கண்ட தலைவர் !**

**தந்தை பெரியார்**
**பேரறிஞர் அண்ணா**
**வழியில் திராவிட இயக்கம்**
**வாழ வளர**

**எழுத்துப் பணி**
**அரசியல் பணி**
**இரண்டையும் இணைத்து 70 ஆண்டுகள்**
**ஓயாத உழைப்பை அளித்தீர்கள்!**

**இந்திய தலைவர் யாரும்**
**செய்யத் துணியாத பணி**
**செய்து வெற்றி கண்டீர்கள்!**

**தமிழில் உயிரெழுத்துகள்**
**மெய் எழுத்துகள் உண்டு !**

**உங்கள் எழுத்துக்களும்**
**உயிர் எழுத்துக்களாக உலா வருகின்றன !**

**உலகம் முழுவதும் தமிழர்கள்**
**உங்கள் மெய் எழுத்துகளைப்**
**படித்து, சுவைத்து,**
**உரையாடிக் கொண்டிருக்கின்றனர்!**

**உங்களை எப்படி மறக்க முடியும் !**

**(1988 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட படம்**
**– மகன்கள் –**
**மருத்துவர் முத்தழகன், மருத்துவர் எழிலன்,**
**முனைவர் ஜெகன்)**

**பேராசிரியர்.மு.நாகநாதன்**

### மலேசியா தளபதி பேரவை சார்பில்

# கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

கோலாலம்பூர், ஆக 8–

தலைகுனிந்து எழுதும் தன் பேனா முனையால் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வை தரணியில் தலைநிமிரச்செய்திட்ட தங்கத்தலைவன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி நேற்று (7/8/2026 (வெள்ளிக்கிழமை) மலேசியாவில் ஜொகுர்பாரில். அலங்கார மலர்பந்தலில் வைக்கப்பட்டுள்ள கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்த பட்டது.

மலேசிய தளபதி பேரவை செயலாளர். அன்னை தெரசா அறக்கட்டளை ஆலோசகர். தமிழக நலிவுற்ற விவசாய சங்கம். மாநில செய்தி தொடர்பாளர். ஹச்எம். ஜெய்னுதீன். மலேசியா தளபதி பேரவை. பொருளாளர் ஜெ. சிவானந்தம், க. புருஷோத்தமன், தினேஷ்குமார், சுந்தரம், காதர் மைதீன், ரஹ்மத்துல்லா, எம்.டி.எஸ். சுந்தர்.திருவாரூர், ரபிக் முஹம்மது, எம்.டி.எஸ். சுந்தர் பட்டுக்கோட்டை எம்டியஸ். வேலாயுதம். எம்.டி.எஸ். கார்த்தி திருவாரூர். தஞ்சாவூர்.எம்.டிஎஸ். மகளிர் அணியைச் சார்ந்த. செல்லம்மாள். பர்வீன் பானு. நஸ்ரத். திவ்யா. மற்றும் பல பொறுப்புகளை சார்ந்தவர்கள். கழக உடன்பிறப்புகள். கலந்து கொண்டு. சிறப்பித்தனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சிங்கை சா.பழனிவேலு

### ஆகஸ்ட் 8 (2020)



சிறு வயதிலேயே கழக கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, தனது கீழத்திருப்பாலக்குடி கிராமத்தில், முன்னோடிகளை வைத்து முதன்முதலாக கழகக் கொடியேற்றி, கிளைக் கழகத்தை தொடங்கிய காரணத்தால், ஊர் பெரியவர்கள் ஒன்றுகூடி புளியங்குச்சியால் இவரை அடித்தனர்.

இளம்வயதில் சிங்கப்பூரில் தொழில் புரிந்திட சென்ற காரணத்தால், திராவிட இயக்க தலைவர்களை சிங்கப்பூர் அழைத்து, அங்கு கொள்கைப் பிரச்சாரம் செய்திட வழி செய்ததோடு, ‘தமிழ் முரசு’ ஏடு நடத்தி, தமிழ்மொழியை வளர்த்தவர்.

கழகத் தலைவர் அவர்கள், “தமிழைக் காக்கும் உணர்வுகளுக்கு வழிகாட்டியாக, இவர் போன்ற இலட்சக்கணக்கானோர் இருக்கும் இயக்கம்தான் தி.மு.க.” என இவரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**